சிவமயம்

REGISTERED AS A NEWSPAPER IN CEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸூ மார்கழி மீ கஉ (1947 டிசெம்பர் 16 செவ்வாய்க்கிழமை) [ இல கூக


## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

மலையானை வருமலைபன் றுரிசெய் தானை
மறையானை மறையாலு மறிய வொண்ணுக்
கலையானைக் கலையாருங் கையினானைக்
கடிவானை யடியார்க ளுயர மெல்லாம்
உலையாத வந்தணர்கள் வாழு மோமாம்
புலியூரெம் முத்தமனைப் புரமூன் றெய்த
சிலையானை வடதளியெஞ் செல்வன் றன்னைச்
சோராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.

—அப்பர்

திருச்சிற்றம்பலம்

## சிறைத்தண்டனை

### ஊர்ஜிதமானது

கொழும்பு நகரசபை பங்கத்தவரும், இலங்கைச் சமதர்மக்கட்சிப் பிரமுகருமான மிஸ்ரர் எம். ஜீ.மென்டிஸ், மாத்தறைப் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் அங்கத்துவம்வகிப்பவரான மிஸ்ரர் எச். டீ. அபயகுணவர்த்தனு என்பவர்கள் உட்பட 32 பேர், 1946-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் நிகழ்ந்த துறைமுகத்தொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக, கொழும்பு நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டுப் பல்வேறுகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். தண்டனையடைந்தவர்கள் கொழும்பு உயர்தர நீதிமன்றத்துக்கு மநுச்செய்தனர்

குறித்த மநு உயர்தர நீதிமன்றத்தில் நீதியரசர்கள கௌரவ எப். ஜே. சூட்ஸ், ஸி. நாகலிங்கம் என்பவர்களாற் சென்றவாரம விசாரணை செய்யப்பட்டது. விசாரணை முடிவில் நீதியரசர்கள், கீழ் நீதிஸ்தலம் எதிரிகளுக்கு விதித்த தண்டனையையே ஊர்ஜிதப்படுத்தினர், அதன்படி மிஸ்ரர் மென்டிஸ் 9 மாதத்துக்கும், மிஸ்ரர் அபயகுணவர்த்தனு 3 மாதத்துக்கும் சிறைத்தண்டனை அநுபவிக்க வேண்டும். ஏனைய எதிரிகளும் அப்படியே தனித்தனி 3 மாதச் சிறைத்தண்டனை அநுபவிக்கவேண்டும்.

## 4—2—48

### இலங்கைச் சுயராச்சியதினம்

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தாம் சுயராச்சியம் எத்திகதியில் வழங்கப்படும் என்று வாரியப்பனைப் பிரதிநிதியான மிஸ்ரர் ஐவன் திஸநாயக்கா, சென்ற வியாழக்கிழமை, இலங்கைப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் பிரதமர் மிஸ்ரர் டி. எஸ். சேனுயக்காவைக் கேட்டார்.


1948-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் 4ந் திகதியே அத்தினமாகும் என்று பிரதமர் பதில் இறுத்தார்.

# சோர வர்த்தகம் ஒழிய

## மகாத்மா காந்தியின் முயற்சி

இந்தியாவிலே இதுவரை விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விதிகள் மெல்லமெல்லவாகத் தளர்த்தப்பட்டு வருகின்றன. இதன் பயனுக பொருள்கள்மீதுள்ள விலை அதிகரிக்கா வண்ணம அரசாங்கம ஜரூராகவிருக்கிறது. அரசாங்கம் எப்படிக் கண்காணிப்பாக இருந்தாலும் பொதுஜன உணர்ச்சியில்லாவிட்டால்,சோரவியாபாரத்தையும "பிளாக் மார்க்கெற்" றையும் ஒழித்தல்முடியாது,

இவ்விஷயத்தை மகாதமா காந்தியடிகள் நன்கு உணர்ந்துள்ளார். ஆகவே "பிளாக மார்க்கெற" வர்த்தகத்துக்கு எதிரான பிரசாரம் செய்யும் வேலையில் அவர் இனி ஈடுபடப்போகிருர் என்று ஓர் செய்தி கூறுகிறது. இவ்விஷயமாக மகாத்மாவை ஓர்பத்திரிகை நிருபர் அணுகிக் கேட்டபோது "அப்படிப் பிரசாரம செய்து சோர வர்த்தகத்தை நிர்மூலமாக்க வேண்டுமென்பதே எனது ஆவல். ஆனுல் எனது முயற்சிக்கு ஓர் விஷயம் குறுக்கே தடையாக நிற்கிறது. புது டெல்கியில் வகுப்புக் கலவரம



இனித் தலைதூக்கமாட்டாது மன்ற உத்தரவாதம் எனக்குக் கிடைக்குமானுல், நான் இன்றே இந்த நல்ல விஷயத்துக்காகப் புறப்பட்டுவிடுவேன். ஆனுல் எல்லாம் இறைவன் திருவுளத்தைப் பொறுத்திருக்கிறது" என்ருர்.

# நம் பணி


திருமதி அ. கு. காமாட்சி அம்மையார், எம். ஏ.


(முற்றொடர்)

இனியவை கூறல், ஏழைக நிரங்கல், அன்ன மளித்தல், எழுத்தறிவித்தல், தேசப்பணி, சமயப்பணி முதலாய பணிகளைத் தாமே செய்தல் செய்யத்தூண்டுதல் செய்யப் பொருளுதவி புரிதல் ஆகிய இவைகளெல்லாம் சமூகப்பணியேயாகும். இப்பணியைச் செய்யும்போதும், நம்பணி எனினும் இறைபணி என்றே நினைத்துச் செய்தல் வேண்டும்.

"பாராதி தனிலுள்ள செய
லெல்லாம் மூடிவிலே
பார்க்கில் நின்செய லல்லவோ"

என்ற எண்ணம் வந்தால்தான் அகங்காரம் நீங்கி அன்பு எழும், பணி என்ற சொல்லைப் பார்த்தாலும், பணிந்து, குனிந்து வணங்கிச் செய்கின்றதே பணியாகும் என்ற பொருள் தொனித்து நிற்கிறது. பணிய என்ருல், தாழ வணங்க இறங்க, குறைய என்று பொருள்பெறும் இறங்குதல் வேண்டும். நம்மினும் அறிவிலோ ஆற்றலிலோ, செல்வத்திலோ கல்வியிலோ குறைந்த மக்களிடையேபணியாற்றவேண்டின் நாம் நம் நிலையினின்றும் அவர்தம் நிலைக்கு இறங்குதல்வேண்டும். பணியாற்ற பணிவுவேண்டும். இங்குக கூறும் பணி அடிமைத்தனத்தைக் குறிப்பதன்று.

'பணியுமாம் என்றும் பெருமை'
"பெருக்கத்து வேண்டும் பணிவு"

என்று வள்ளுவனுர் குறிப்பிடும் பணிவே இங்கே வேண்டற்பாலது. பணிவொடு கூடிய இப்பணியே-அன்பினுல் ஏனைய உயிர்களனைத்தையும் அன்பராய்க் கருதிச் செய்யும் பணியே—அன்பர் பணியாகும். இத்தகைய அன்பர்பணியாலடையும் இன்பமே உயர்ந்த இன்பமாகும்.

"அன்பர்பணி செய்யவெனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இனபநிலை தானேவந்
தெய்தும் பராபரமே"

ஆன்மப்பணி: ஒவ்வொருவரும் மேற்கூறிய முதற்பணி சமூகப்பணியோடு தமது ஆன்ம முன்னேற்றத்திற்காகச் செய்யும் பணியை ஆன்மப் பணி எனலாம். அன்பர்பணி அல்லது சமூகப்பணியாகிய முற்கூறிய தொண்டில் ஈடுபட்டாலேயாதும்பேமுக்தி கிட்டுமே என்று பலர் வாதிக்கலாம். "நடமாடும் கோயிலுக் காற்றும்பணி படமாடும் பரமற்கங்காகுமே" என்று மேற்கோளொன்றுங் காட்டலாம். தெய்வநம்பிக்கை யில்லாவிடினும், இறையுணர்ச்சி இல்லாவிடினும் உண்மையான சமூகப்பணியே உய்வளிக்கும் உயர்வுடையது என்று தற்கால அறிஞர் பலர் கூறுகின்றனர். உயர்ந்த எண்ணங்கள் வாய்ந்த, உன்னதக் குறிக்கோளைக் கொண்ட தியாகம் நிறைந்த சேவா வாழ்க்கையே சாலச்சிறந்ததென்பதில் உண்மை இருந்தாலும் தெய்வ நம்பிக்கையோடு கலந்த சமூகப் பணிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு மகாத்மாகாந்தியின் தேசசேவைக்கு பெருமை யளிப்பது, அவர்க்கு, கடவுளுண்டென்ற உணர்ச்சியும் ஈடுபக்தியுமேயாகும். நாம் ஆற்றும் பணிக்குப் புத்துயிர் அளிப்பதும் சித்தொளி வீசுவதும் இறையுணர்ச்சியேயாகும். நம்மை ஆளும் பரமன் நம் ஒவ்வொருவருள்ளத் துள்ளும் ஒளிந்தவாறே நம் செயலனைத்தையும் கண்காணிக்கின்ருன் என்ற எண்ணம் இருப்பின் அது நம்மைத் தவநெறிக்குச் செலுத்தா விடினும் அவநெறியிலேனும் செல்லாதிருக்கத் துணைபுரியும்.

"கண்காணி யில்லென்று
கள்ளம்பல செய்வார்
கண்காணி யில்லா
யிடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு
நின்ருனைக்
கண்காணி கண்டார்
களமொழிந் தாரே."

என்பது திருமூலர் திருவாக்கு.

இறையுணர்வொடு கூடிய சமூகப் பணியே மிகச் சிறந்ததாகும். அறச் சிந்தனையை அறவே ஒழித்து உயிர்ப்பணியை உள்ளத்தும் நினையாது செய்யும் இறைவழிபாடு இறைவனுக்குச் செல்லுமேயன்றி இறைவனுக்கேற்கும் இறைவழிபாடு உயிரினத்திறகுச்செல்லாது எனும் மாபெரும் உண்மையை, "படமாடக்கோயில் பகவற்கொன் றீயில், நடமாடக்கோயில் நம்பர்க்கங்காகா. நடமாடக் கோயில நம்பர்க்கொன் றீயில் படமாடக் கோயில்பகவற்கு ஈமே" எனத் திருமூலர்மிக அழகாக எடுத்துக்கூறுகின்ருர்.

சமயப் பணியைப் போற்றுவர் சமயப் பெரியாரெலாம், சமூகப்பணியே சாலச் சிறந்ததென்பர் சமூகத்தொண்டர்கள்.

"இறைவன் கழலேற்றும்
இன்பமே இன்பம்
'செல்வன் கழலேத்தும்
செல்வம் செல்வமே,"

என்பர் அன்பர் சம்பந்தப்பெருமான்

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதி னுயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி
வித்தல்"

என்று பாடுவார் பாரதியார்.

அறிவும் ஆற்றலும் படைத்த மக்களினத்துள் ஒவ்வொருவரும் தயக்கமற்ற பணியைச் செவ்வனேசெய்யக் கடமைப்பட்டுள்ளனர். கற்பதெல்லாம் பணி செய்தற்கே என்ற உண்மையைச் சம்பந்தர் "கற்றதுறப் பணி செய்து காண்டு மென்பார்" என்றும், பிறவாமையை அடைதற்கும் பணியே துணைபுரியும் எனும் அரிய கருத்தை, 'பிறப்பறுத் துய்யவேண்டில் பணியுடைத் தொழில்கள் புண்டு" என்றும் கூறுகின்ருர். தொண்டருள் தொண்டராய்த் திகழ்ந்த திருநாவுக்கரசரோ பணிக்கெனத் தனிப் பதிகமொன்றையே வகுத்துள்ளார். அதை "பணி செய்"ப் பதிகம் என்றே கூறலாம் திருச்சோற்றுத்துறை பதிகமொன்றில், (5. 33) பதிகத்தின் பதினெரு பாட்டுக்கள் ஒவ்வொன்றின் ஈற்றடியிலும் பணிசெய்வதின் பான்மையைப் பகர்கின்ருர்.

பணி செய்வதற்கு அரும் பெருந்துணையாய் அமைந்திருக்கிறது அப்பர் பதிகம். அதன்வழி நின்று, அறநெறி பேணி, அன்பைப் பெருக்கி அரும்பணியாற்றி அரனருள் பெறுவோம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஷூ
மார்கழி கஉ செவ்வாய்க்கிழமை

## வெங்காயம்

இந்த இலங்கையிலே இக்காலத்தில் வரும் அரசிறை வருவாய், இலங்கைப் பரிபாலனச் செலவிற்குப் போதாம லிருக்கின்றது; அதனாற்றான், இப்பொழுதுள்ள மந்திரி சபையினர் சில பொருள்களின் இறக்குமதித் தீர்வையையு ம்வேறு வரிகளையும் உயர்த்த வேண்டுமென நோக்கங்கொண்டு முயற்சி செய்கின்றனர் எந்நாட்டிலாக, அரசிறை வருவாய்க்கு மேற்பட்ட பரிபாலனச் செலவு நேருமானல, "ஆனமுதலில் அதிகஞ் செலவானல், மான மழிந்து மதிகெட்டுப் போனதிசை, எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்........" என்றவன் நிலைமைபோல, ஒருபோதும் இந்த நாடு தலை நிமிர்த்தப் போவதில்லையெனலாம்.

இந்தநாடு இக்காலத்திலே இப்படியான தாரித்திரிய நிலையையடைந் திருத்தற்குப் பிரதான காரணம் இக்காட்டிலே, மக்களின் நித்திய வாழ்க்கைக் குரிய பொருள்பண்டங்கள் இங்கு விளைவிக்கப்படா தொழிய, அதனாலே இங்குள்ள மக்க ளெல்லாரும் இப்படியான பொருள் பண்டங்கள் பொருட்டு அந்நியநாட்டை நம்பி எதிர்பார்த்த வண்ணம் இருத்தலேயாம்.

இந்நாட்டி லுள்ள மக்கள் எத்தனையோ முறை இப்படியான பொருள்க ளில்லாமையாற் கஷ்டப்பட்டாலும், பஞ்சப்பட்டாலும், அப்பொருள்கள் ஒருவாறு அந்நியநாட்டி லிருந்து இங்கு வந்துசேர்ந்தவுடன், தாமபட்ட கஷ்டத்தையும் பஞ்சத்தையும் அறவேமறந்து, அப்பொருள்களைத் தாமாக ஆக்கி உபயோகிக்கவேண்டுமென முன் கொண்டிருந்த நோக்கத்தையும் அயர்த்துவிடுகிறார்கள்; சங்கடம் வந்த நேரத்தில் அதனைத் தீர்க்க வேண்டுமென்று நினைந்து முயற்சி செய்வதும், சங்கடம் வேறு வழியால் ஒருவாறு நீங்கிவிடவே தாம் கொண்ட நோக்கத்தையும் எடுத்த முயற்சியையுஞ் சோரவிட்டு அயர்த்துப் போதலுமாகிய இப்படியான செயல்கள் சுடலை ஞானத்தைப் போன்றனவாகும்; இந்த விதமான செயல் இந்த யாழ்ப்பாணத்தின ரிடத்து மாத்திரமல்ல, இலங்கையிலுள்ள ஏனைய சாதியின ரிடத்து மாத்திரமல்ல, இவர்க ளெல்லாரையும் பரிபாலிக்கும் அதிகாரிக ளிடத்துமுண்டென்று சொல்லுதல் மிகையாகாது.

ஒவ்வொரு நாட்டிலும் அந்த அந்த நாட்டிலேயுள்ள மக்களே தங்கள் நித்திய வாழ்க்கைக் குள்ள இன்றியமையாப் பொருள்களை ஆக்கிக் கொள்ளல் வேண்டும்; அலட்சியமாகவும் முதற் பணமின்மை காரணமாகவும் அந்நாட்டு மக்கள் அப்படியான தொழில்களிலே பராமுகமா யிருக்கத் தலைப்பட்டால், அந்த நாட்டைப் பரிபாலனஞ் செய்யும் அதிகாரிகள் அவர்களுக்கு மூலதனத்தை யுதவி அவர்களை ஊக்கவேண்டும்; அங்ஙனஞ் செய்யவும் மக்கள் ஊக்கமுறாவழி, அதிகாரிகள் தம் பொறுப்பில் இப்படிப்பட்ட வாழ்க்கைக் கின்றியமையாப் பொருள்களை ஆக்குவிக்க ஒழுங்கு செய்தல் வேண்டும். அப்படிச் செய்யும்போது சிக்கன வழிமைத் தீர்க்கமாகக் கையாண்டே ஆக்குவித்தல் ஆவசியகமாம்; இப்படிச் செய்வதனால் நாட்டிலே பொருள்கள் விருத்தியாகும், பஞ்சம் முதலியன அகலும், வருவாய் அதிகப்படும்; இந்நாட்டுமக்கள் இப்படியான பொருள்களின் பொருட்டு அந்நிய நாட்டினரைப் பெரும்பாலும் எதிர்பார்த்த வண்ண மிருக்கவும் நேராதாம்.

இப்பொழுது இவைகளையெல்லாம் எதற்காக எடுத்துவரைகின்றோ மெனிற் காட்டுதும்; மக்களின் உணவுப் பண்டங்களில் இன்றியமையாதெனக் கண்ட வெங்காயம், சில வாரங்களாக விலையேறிச் சென்றவாரம் ரூத்தல் 75சதம் 80 சதம், சிலவேளையில் ஒரு ரூபாவாகவும் விலைப்படத் தலைப்பட்டது; இப்படி விலையேறிய போதும் இங்குள்ள மக்கள் அநியாய விலை கொடுத்து வெங்காயத்தை அற்பமாகவேனும் வாங்கி உபயோகிக்க வேண்டிப் பெருங்கஷ்டப்பட்டார்கள்; இற்றைக்குச் சில தினங்களுக்கு முன்னர் வெங்காயம் அந்நிய நாட்டிலிருந்து வந்து கொழும்பில் இறக்குமதி செய்யப்பட்டமையினாற் போலும், நேற்று இன்று தொட்டு ஒரு ரூத்தல் வெங்காயம் 50 சதம் வரையில் விலைப்படத் தலைப்பட் டிருக்கிறது; இந்த வெங்காயம் இலஙகையிலே ஆக்கப்படாததுமல்ல, ஆக்கப்பட முடியாததுமல்ல; ஆனாலும் வெங்காயப் பஞ்சம் இப்போது இந்நாட்டு மக்களை வருத்துகின்றது. காரணமென்ன?

வெங்காயம் இந்த இலங்கையிலே பெரும்பாலான இடத்தில் விளைவிக்கக்கூடிய பொருளென்றும், விசேஷமாகயாழ்ப்பாணப் பெரும் பிரிவில் வெங்காயம் ஆக்குதற்காகிய நிலம் எங்குமுண்டென்றும் பயிரிடுந் தொழிலில் அநுபவ முடையவர்கள் சொல்லுகிறார்கள்; ஆனதினால் யாழ்ப்பாணத்திலாக, இலங்கையின் ஏனைய பாகங்களிலாக வெங்காயம் எங்கெங் கெல்லாம் இட்டு விருத்தி பண்ணுதல் இயலுமோ, அங்கங் கெல்லாம் அதனைப் பயிரிட்டு விருத்தி செய்து இலங்கை மக்களின் உபயோகத்திற்குப் போதிய வெங்காயத்தை ஆக்குவதே உசிதமாகும். இவ் விஷயத்தில் ஊரவர்களும் அதிகாரிகளும் ஊக்கங் கொள்ளுதல் வேண்டும்

வெங்காயத்தை இந்த யாழ்ப்பாணநாட்டிலே [illegible] விருத்தியாக்கு[illegible] இப்பொழுது, வடபகுதி விவசாய

## செய்தித் திரட்டு

இலங்கையிலே வெங்காயம் இன்னும் மேலதிகமாக விளைவிப்பதற்கு ஓர் திட்டத்தை அரசாங்கம் நடத்த இருக்கிறது. அந்தத் திட்டத்துக்கு 450 லட்சம் ரூபா செலவிடப்படுமாம்.

0 0 0

எலிசபெத் இளவரசிக்கும் எடின்பரோ கோமகனுக்கும் வருஷம் ஒன்றுக்குமொத்தம் 50,000 பவுண் மான்யம் அளிக்க பிரிட்டிஷ் பாராளுமன்றம் தீர்மானித்திருக்கிறது

0 0 0

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓர் சகாயநிதித் திட்டத்தையும் பென்ஷன் திட்டத்தையும் ஏற்படுத்தக் கைத்தொழில். மீன்பிடித் தொழில்மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ் ஈ. டீ சில்வா முயற்சி செய்கிறார்.

0 0 0

இலங்கை சுயராச்சிய அந்தஸ்தை அடைந்ததும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஹைகமிஷனராக மிஸ்ரர் டபிள்யூ வீ. ஹாங்கின்ஸன் என்பவர் நியமிக்கப்படுவார்.

0 0 0

1948-ம் ஆண்டு மே மாதத்துடன்பிரிட்டிஷ் அரசாங்கம் பலஸ்தீனத்தில் உள்ள தனது பொறுப்பை நீக்கிவிடுமென்று பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி சென்றவாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## திருவெம்பாவையோதுதல்

இந்த மார்கழிமாதம் 4உ வெள்ளிக்கிழமை தொடக்கம் 13உ திருவாதிரை நாள்வரை, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில், திரு. வ. கார்த்திகேசு அவர்களைத் தலைமையாகக் கொண்ட தொண்டர் கூட்டத்தினர் 'பஜனை' என்ற முறையில் புலரிக்காலந்தோறும் வண்ணை வைத்தீசுவரர் கோயிற் சந்நிதியிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள பிரதானவீதிகளால் திருவெம்பாவை யோதியவண்ணஞ் சென்று, மீண்டும் மேற்படிகோயிற் சந்நிதானத்தை யடைவரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

ஆங்கில கலாசாலைகளில் ஸ்கூல் பைனல், இண்டர்மீடியேட் ஸீனியர், பீ. ஏ. ஸீனியர் வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்காக, 1948ஷூ மார்ச்சுமீ 6உயில் இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வழக்கம்போல் நடக்தப்பெறும் ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைக்கு வரும் மாணவர்கள், 1948

விளைவு ஐக்கியசங்கத்தின் காரியதரிசியாகிய திரு. V. R. முருகேசு அவர்கள் செய்யத் தொடங்கியிருக்கிறாரென அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம்; இவர் இந்திய அரசினர் மூலமாக, விதைக்குரிய 600 தொன் நிறை கொண்ட வெங்காயத்தை தென்னிந்தியாவிலுள்ள திண்டுக்கல் ஐக்கிய விற்பனைச் சங்கத்தாரிடம் வாங்கி இங்கே தருவிக்கின்றார். உணவுப்பொருள் விஷயத்தில் இப்படியான வியாபாரத்தைச் செய்வதற்குத் தென்னிந்தியாவிலுள்ள ஐக்கிய வியாபாரச் சமுதாயத்தினரும் சம்மதித்திருக்கின்றனரெனவும், இங்குள்ள விவசாயிகட்கு இவ்வெங்காயம் விதைமுதலாகப் பகிர்ந்து கொடுக்கப்படுமெனவும், அங்ஙனம் பகிர்ந்து கொடுபட்ட பின்னர் விவசாயிகள் இதனை விதையின் பொருட்டு உபயோகிப்பதன்றிச் சோரவியாபாரமுறையில் துர்விநியோகஞ் செய்யாவண்ணம்தமதுசங்கத்தின் உத்தியோகத்தர்மேற்பார்வை செய்துகொளவரெனவும்திருமுருகேசுஅவர்கள்தெரிவித்துள்ளார்.ஏனையஉணவுப்பொருள்களை விருத்தி செய்யும் விஷயத்திலும் இந்த முறையைத் தங்கள் சங்கம் கைக்கொள்ள விருக்கிறதெனவும் [illegible] இவரையும் இவர் தலைமை வகித்திருக்கும் ஐக்கிய சங்கத்தையும் பாராட்டுகின்றோம்.

## தேவை

அநுராசபுரம் விவேகானந்த வித்தியாலயத்திற்குத் தமிழ் ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்ற ஒரு ஆசிரியை 19-1-48 தொடக்கம் தேவை. 31-12-47 க்கு முன்னர் மனேஜருக்கு விண்ணப்பிக்கவும். சைவசமயாசாரம், சங்கீதம், தையல், வீட்டுப்பணி, ஆங்கிலம் ஆதியவற்றில் விசேஷ திறமை யுடையோர் பெரிதும் விரும்பப்படுவர்.

தெரிந்தெடுக்கப்படுவோர் தமக்குரிய இடவசதிகளைத் தாங்களே ஒழுங்கு செய்துகொள்ளவேண்டும்.

வே. இராமசுவாமி
மனேஜர்
விவேகானந்த வித்தியாலயம்
அநுராசபுரம்
11—12—47.

M 201 16

## விளம்பரம்

யாழ்ப்பாணம் உதவி ஏசண்டர்

1948 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ந் திகதி வரை எனக்கு தேவைப்படும் எள்ளுப் புண்ணாக்கை. விலைக்குத் தரக்கூடியவர்களிடமிருந்து 1947 ம் ஆண்டு டிசம்பர் மாசம் 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணிபளவில் குறித்த (டெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார். விண்ணப்பப் பத்திரங்களை 1947-ம் ஆண்டு டிசம்பர் மாசம் 20 ந் திகதி சனிக்கிழமை காலை 12 மணியளவில் ரூபாய் 50 ஒவ்வொரு பத்திரத்திற்கும் கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். மறு விபரங்களைக் கந்தோரிற் பெற்றுக்கொள்ளலாம்.

ம. ஸ்ரீகந்தா
உதவி ஏசண்டர்
யாழ்ப்பாணம்

G 129 16

## அறிவித்தல்

வண்ணார்பண்ணை கிழக்கு நீராவியடிக் கல்லூரி வீதியில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குரிய ஆச்சிரமக் காணியில் நிற்கும் இரண்டு முதிய புளிய மரங்கள் நிகழும் சர்வசித்து வருடம் மார்கழி மாதம் ரு உ (20-12-47) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மேற்படி சபை அங்கத்தவருள் ஒருவராகிய திரு. சி ஐயம்பிள்ளை உடையார் அவர்களால் குறித்த காணியில் ஏலத்தில் விற்கப்படும். விரும்புவோர்குறித்த நேரத்திறகுறித்தஇடத்திற் சமுகமளித்து அவற்றை விலைக்குப் பெறலாம்.

மு. மயில்வாகனம்
காரியதரிசி
யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை
15—12—47,

M 203 16, 19

ஷூ ஜனவரிமீ 26உக்குள்ளும்,ஸர்வஜித்துஷூ பங்குனிமீ 23, 24, 25 (1948-ஷூ ஏப்ரல்மீ 5, 6, 7) தேதிகளில் நடத்தப்பெறும் தனித்தமிழ்ப் பரீக்ஷைக்கு வரும் மாணவர்கள் ஸர்வஜித்து ஷூ தைமீ 15உ (28-1-'48 க்குள்ளும் விண்ணப்பப் பாரத்தையும் பரீக்ஷைக் கட்டணத் தொகையும், இச் சங்கமாபீசு மானேஜருக்கு அனுப்பவேண்டு மென்றும், மேலே குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்பு வரலாகும் பணம் யாவும் அங்கீகரிக்கப்படமாட்டாவென்றும் அறிவிக்கப்படுகிறது.

பரீக்ஷைக் கட்டணத் தொகை:— மெற்றிக்குலேஷன் அல்லது ஸ்கூல் பைனல் பரீக்ஷைக்கு ரூபா ஒன்று. இண்டர்மீடியேட் பரீக்ஷைக்கு ரூபா ஒன்றரை. பீ. ஏ. பரீக்ஷைக்கு ரூபா இரண்டு.

குறிப்பு: சென்னை யூனிவர்சிடியாரால் 1948-ம் ஷூப் பரீக்ஷைக்கு, பீ. ஏ. ஸீனியர், இண்டர்மீடியேட் ஸீனியர், ஸ்கூல் பைனல் வகுப்புக்களுக்கு வைக்கப்பட் டுள்ள Detailed and Non-detailed தமிழ்ப் பாடங்களே சங்கப் பரீக்ஷைகட்கும் பாடங்களாகும். இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்பினால் விண்ணப்பாரம இவ்வாபீசி லின்றும் பெறலாம். என்று மதுரைத் தமிழ்ச் சங்க மனேஜர் பிரம்ஸ்ரீ லக்ஷ்மணநாராயணன் தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கக்கொடி—அது சிங்களக்கொடியா?

## சூரபன்மன் கொடி சிங்கக்கொடி!

### துர்க்கையின் கொடியும் அதுவே!

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

இன்று இலங்கை மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருப்பது கொடிப் பிரச்சினை. சுதந்திர இலங்கைக்கு எந்தவிதமான கொடியை நிர்மாணிக்கவேண்டும்? சிங்களரில் ஓர் பெரும்பகுதியினர் வாளேந்திய சிங்கக்கொடியையே தேசியக்கொடியாக்கவேண்டுமென்று முனைந்திருக்கின்றனர்கள்; இன்னொரு சாரார், ருஷியாவின் சம்மட்டி சத்தகம் பொறிக்கப்பட்ட கொடியை ஆரோகணிக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றனர்கள். இந்த இரு சாரார்க்குமிடையில் தமிழ்க் காங்கிரஸ் ஓர் நவமான கொடியை உண்டாக்கியிருக்கிறது இந்தியக் காங்கிரசின் மூவர்ணக் கொடியை ஆதாரமாகக் கொண்டு அதனுடன் இரத்த நிறத்தைச் சேர்த்திருப்பதே தமிழ்க் காங்கிரசின் கொடியாகும். சிங்களர், தமிழர், ஏனைய சிறுபான்மையினர் என்பதைக் காட்ட மூவர்ணமும் இருக்கலாம். ஆனல் இரத்த நிறம் எதனைக் காட்டுகின்றது? சோவியத் ருஷியாவின் புரட்சிக் கொள்கையையா? அப்படியானல் அது தமிழ்மக்களின் கலைக்கு நாகரிகத்துக்கு முழுவதும் விரோதமானது என்பதனைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. உலகம் முழுவதுக்கும் ஓர்காலத்திலே அரசியல் ஞானத்தை, கலைப் பொக்கிஷத்தை, நாகரிகத்தைப் பரப்பிய தமிழ்மக்கள், இன்று ருஷியாவின் கொள்கையைப் பின்பற்றி, அந்த ருஷியாவின் கொடியைப் பின்பற்றுவதானல், அதனைப் போன்ற இழுக்கு நமக்குப் பிறிதொன்றில்லை எனலாம்.

O

**இலங்கையின் கொடி எது?**

பூர்வகாலந்தொட்டுக் கொடிஉயர்த்தித் தம் கருமங்களை நடாத்தி வந்தவர்களில் தமிழர்தான் சிரேட்டமானவர்கள் என்பது சரித்திர உண்மை. சரித்திர காலத்துக்கு முன்னரேயே எம் கோவில்களில துவஜாரோகணம் நடைபெற்று வந்திருக்கிறது வேறெந்தச் சாதியினரின் ஆலயங்களில் இப்படித் துவஜாரோகணம் நடைபெறுவதில்லை. பூர்வ காலந்தொட்டுக் கொடிக்கு ஓர் தனி மதிப்புக் கொடுத்து அதனை வணக்கஞ்செய்து வந்தவர்கள் தமிழர் அவர்களைப் பின்பற்றியேஏனைய சாதியினரும் கொடி வணக்கம் செய்யத்தலைப்பட்டனர் என்று அறிஞர் கூறுவர். எது எப்படியாயினும் ஆகுக. இன்று இலங்கைக்கு எந்தக்கொடி ஏற்றது? 1815 ம் ஆண்டிலே இலங்கை பிரிட்டிஷாரிடம் சரணடைந்தபோது எந்தக்கொடியை எங்கள் தமிழ் அரசன்——ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன்——வைத்திருந்தானே, எந்தக் கொடி இலங்கையின் கொடியாக இருந்ததோ—அதனையே மீண்டும் ஆரோகணிக்கவேண்டும் அது சிங்கக்கொடி, வாளேந்தியசிங்கக்கொடி. "சிங்கம்" என்றவுடன் ஓர்சிலர் சிங்களரை அதனுடன் இணைப்பது மிகவும் பேய்த்தனமான ஓர் விஷயம். எங்கள் தமிழ்நாட்டிலே "சிங்கப்" பெயருடையவர்கள் இல்லையா? வன்னியசிங்கம், குலசிங்கம், வீரசிங்கம் என்னும் பெயர்கள் சிங்களப் பெயர்களா? இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்கள் அச் சிங்களக் கோடியை ஆரோகணித்திருக்கையில் அதனை நாம் ஏன் எதிர்க்கவேண்டும்?

O

**சிங்கக்கொடி—தமிழ்க்கொடி**

சிங்கக் கொடியை இன்று சிங்களமக்கள் தங்கொடி என்று கூறினல் நாம் பெருமைப்படவேண்டும். ஏன், எங்களுடைய ஓர் சின்னத்தை அவர்கள் தமதென எடுத்துப் போற்றுவதையிட்டு! சூரபன்மனுடைய கொடி எது? சூரபன்மன் யார்? சூரபன்மன் தமிழன் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர். அவன் நாட்டியது சிங்கக் கொடிதான்! எங்கள் அகிலாண்டேசுவரியின் வாகனம் என்ன? சிங்கம். அந்த அன்னையின் துவஜம் என்ன? சிங்கம்! தமிழ் மக்களின் பலவித துவஜங்களில் சிங்கத் துவஜமும் ஒன்று; அதனையே இந்த இலங்கையை ஆண்ட சிங்களமன்னரும், தமிழ் மன்னரும் தம் தேசீயக்கொடியாக ஆரோகணித்திருந்தனர். இந்தச் சிங்கள மன்னர் தாம் யார்? இவர்கள் அனைவரும் தமிழ் இரத்தங் கலக்கப்பெற்றவர்கள் தான். இந்த இலங்கையிலே ஓர்சில அரசியல் வாதிகள் வேண்டுமென்று சிங்களரையும் தமிழரையும பிரித்து வைத்திருக்கிறர்களேயன்றி, உண்மையில் இந்த இரு சமூகத்தார்களுமிடையே அதிக வேற்றுமைப்பாடுகள் இல்லையெனலாம் சிங்களப் பாஷைக்கும் தமிழ்ப் பாஷைக்கும் எழுத்து வடிவத்தில் அதிக பேதம் உண்டேயல்லாமல் ஒலிவடிவத்தில் அதிக பேதமில்லை, சிங்கள அறிஞர்கள் தமிழ்ப் பாஷைக்கு ஓர் தனி மதிப்புக் கொடுத்து அதற்கு மரியாதைகாட்டி வருவதை நான் அறிவேன். "தமிழையும் சம்ஸ்கிருதத்தையும் உணர்ந்து, அப் பாஷைகளில் உள்ள சிறந்த பொக்கிஷ நூல்களைப் படிக்காதவன் ஓர் மனுஷனக மாட்டான்" என்ற கருத்துக்கொண்ட ஓர் சிங்களக் கவி உண்டு. அந்தக் கவியை நமது அன்பர், பிறக்ரர் டபிள்யூ சதாசிவம் அவர்கள் எனக்கு அடிக்கடி படித்துக்காட்டுவது வழக்கம்.

O

**எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளல்**

சிங்கக்கொடி, சிங்களக் கொடியல்ல; அது இலங்கைக் கொடி; ஓர் சில சிங்கள மக்கள் அக்கொடி தமக்குத்தான் உரியதென இன்று கூறுவரேயானல் அது அவர்களின் ஞானசூனியத்தைக் காட்டுகின்றது. அது சுத்தத் தமிழ்க்கொடி, அதனைச் சிங்கள மக்கள் தமக்கென உரிமை பாராட்டி. அதனை இலங்கைக் கொடியாக்கி, உலகமெல்லாம் பறக்கச்செய்வாரானல் நாம் உண்மையில் மகிழ்ச்சியடைந்து அதன் பொருட்டு அவர்களுக்கு எம் சமூகம் உள்ளளவும் நன்றி பாராட்டவேண்டும். இந்த மேலான பரந்த மனப்பான்மையை விடுத்து, விஷயங்களை உள்ளதுள்ளவாறு கிரகிக்காமல், சிங்களமக்கள் அதனைக் கொள்வதால், அதனை நாம் ஏற்கமாட்டோம் என்று கூறுதல் மௌட்டீகத்தின்பாற்பட்டது. அதுமாத்திரமல்ல, எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளுவதுபோல முடியும். சிங்களமக்களின் மனத்தை அவசியமின்றிப் புண்படுத்த ஏதுவாகும். இரு நூற்றுண்டு காலத்துக்கு மேலாக தமிழராகிய நாம்—எம் கலையைக் கெடுத்த—எம் சமயத்தைப் பங்கப்படுத்திய — எம் பொருளாதார நிலைமையைச் சீர்குலைத்த — அந்நியருக் கடங்கி, அவர்களுடைய அந்நியக் கொடியை—அர்த்த மில்லாத கொடியை வணங்கவில்லையா? அப்படிச் செய்த நாம், இன்று சிங்கக்கொடியைப் புறக்கணிப்போமேயானல் அதனல் விளைவது என்ன? ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிங்கக்கொடி, சிங்களக் கொடியாகவே யிருக்கட்டும். அதுவே தேசீயக்கொடி என்று சிங்கள மக்கள் தீர்மானித்து ஆரோசணித்தால், அதனை நீக்க எமக்குச் சக்தியுண்டா? தன்பலமும் மாற்றான் பலமும் அறிந்து, அதன்பின் யுத்தத்துக்குப் போகிறவனே தான் பலவான்—புத்திசாலி—ராசதந்திரி. இலங்கையிலே முஸ்லீம்கள் சிங்கக் கொடியை ஏற்றுவிட்டார்கள், பறங்கியரும் ஏற்றுவிட்டார்கள் இந்தியரும் ஏற்கவே போகிறர்கள். தமிழராகிய நாம் ஏற்காவிட்டால், அதனல் சிங்கள மக்களுடைய குடி மூழ்கிப்போய்விட மாட்டாது. அரசாங்கம் ஸ்தம்பித்துவிட மாட்டாது. சர்வதேச மன்றங்களிலே, சிங்கக்கொடி பறக்காமல்விடாது. நிர்தவிஷயங்களைத் தமிழ் மக்களாகிய நாம் சித்த சமாதானத்துடன் ஒவ்வொருவரும் சிந்தித்தல் வேண்டும், தமிழ் மக்களுடைய ஒத்துழைப் பில்லாமலேயே சிங்களர் இந்த இலங்கையைப் பரிபாலிக்கமுடியும். சென்னை மாகாணத்திலே முஸ்லீம்லீக்கின் உதவியின்றி, அரசாங்கம் நடக்கவில்லையா? பம்பாயிலே நடக்கவில்லையா? சிந்து மாகாணத்திலே 100 க்கு 30 விகிதமான ஹிந்துக்களின் உதவியின்றி முஸ்லீம்கள் அரசியல் நடாத்த வில்லையா? மேற்கு வங்காளத்தில் ஹிந்துராஜ்யம் நடக்கவில்லையா? கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம் ராஜ்பம் நடக்கவில்லையா? அதே போல, இந்த இலங்கையிலும் தமிழ் மக்களின் ஒத்துழைப் பில்லாமலே அரசாங்கம் நடைபெற்ருல், அது தலைகீழாய்ப் புரண்டுவிடுமா? இன்று இலங்கை யரசாங்கத்திலே. யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் பங்குபற்றவில்லை. நாம் புறக்கணிக்கப்பட்டே யிருக்கிறேம் அதனல் அரசாங்கம் நடைபெறவில்லையா?

O

**நிலைமையை உணரவேண்டும்.**

தமிழ் மக்களாகிய நாம் எமது நிலைமையை உள்ள உள்ளவாறு உணருதல் வேண்டும். நாம் அரசியலைக் கைப்பற்ற வேண்டும். கேந்திர ஸ்தானங்களில் எமது பிரதிநிதிகள் இருக்க வேண்டும், கொடிப் பிரச்சினைபோன்ற அற்ப விஷயங்களில் நாம் எம் மனத்தைச் செலுத்தி எம் ஆற்றலைச் செலவிட வொண்ணது. இலங்கையின் தேசீயக்கொடி எதுவாகவும் இருக்கட்டும் சிங்கக்கொடியல்ல எருமைக் கொடியை ஆரோகணித்தாலும், எமக்கு அதனற் குடிமூழ்கிப் போய்விடாது, அல்லது. நாம் விரும்பும் கொடியை நிர்ணயிப்பதால், எங்கள் பொருளாதார நிலைமை முன்னேறமாட்டாது. எமக்கு வேண்டியது காரியம். எமது பிற்காலமோ மிகவும் கேவலமாகப் போகிறது. அந்தக் கேவல நிலைபைத் தடுக்கவேண்டுமானல், நாம் அரசாங்கத்திலே பங்குபற்றவே வேண்டும். வெளியில் இருந்து கத்துவதால் ஆம்பயன் ஒன்றுமில்லை. மிஸ்ரர். சேனநாயக்காவின் அதிகாரம் வர வர அதிகரித்துக் கொண்டே வருகிறது. அந்த அரசாங்கம் கவிழும் என்று எதிர் பார்த்தல் வீண். எதிர்க்கட்சியின் பலம் வரவரக் குறைந்து கொண்டு வருகிறது. தமிழ் மக்கள் அரசாங்கத்திற் பங்குபற்ற வேண்டும். நாம் சிங்களர்க்கும் பணியக் கூடாது. அவர்களைப் பகைக்கவும் கூடாது நுண்ணிய ராஜதந்திரத்துடன், இச் சந்தப்பத்தில் கருமமாற்றிக் கேந்திர ஸ்தானங்களில் நுழையவேண்டும். அதற்கு முதல் மார்க்கம, ஐக்கிய தேசீயக்கட்சிக்கும், தமிழ்க் காங்கிரசிற்கு மிடையே ஓர் நேச மனப்பான்மை ஏற்பட்டு ஒற்றுமை வர வேண்டும். தமிழ்க் காங்கிரஸ தான் தமிழரின் பிரதிநிதித்துவ ஸதாபனம் என்பதனை மறுப்பதற்கில்லை, ஆகவே, தமிழ்க் காங்கிரஸ அதிகாரபீடம் இவ்விஷயத்தில் வழிகாட்டுமா?

———

கொழும்பு

# ரேடியோ நிலையம்

## தமிழ் நிகழ்ச்சிகள்பற்றிய குறிப்பு

திரு. எம். எஸ் திருவிளங்கம் அவர்கள்,
கொழும்பு ரேடியோ நிலையத்திற் செய்த பிரசாரணம்

(முற்றொடர்)

ரேடியோ கேட்கும் நேயர்களின் விருப்பு வெறுப்பு என்ன வென்பதையும் எந்தெந்த நிகழ்ச்சிகளை ஆவலுடன் கேட்கிறர்கள், எதெதை ஒதுக்கி வைக்கிறர்கள் என்பதையும் நிலைய அதிகாரிகள் அறிந்துகொள்வதற்கு ஒரேயொரு வழிதானுண்டு அதுதான் அவர்கள் எழுதும் கடிதங்கள். கேட்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி பட்சபாதகமில்லாத முறையில் உங்கள் கருத்துகளையும், கண்டனங்களையும் தெரிவியுங்கள். எத்தனையோபேர் ரேடியோ நிகழ்ச்சிகளைப்பற்றி தங்கள் அபிப்பிராயங்களைக் கூற விரும்பியபோதிலும் அசட்டைத்தனத்தினலோ, பயத்தினலோ, சோம்பலினலோ அவ்விதஞ் செய்யாமல் "நமக்கென்ன" என்று இருந்துவிடுகிறர்கள். இது முற்றிலும் தவருன கொள்கையாகும். நேயர்களைத் திருப்திசெய்வதே எமது நோக்கமானதால், அவர்களுடைய உள்ளக்கிடக்கையை நாம் அறியவேண்டியது அவசியம். அறிந்து அதன்படி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முயலுவோம்.

இலங்கை ரேடியோ மூன்று பாஷைகளில் ஒலிபரப்பி வருகிறது. தமிழ், சிங்களம், ஆங்கிலம். ரேடியோச் செலவுக்கென்று அரசாங்கம் அளித்திருக்கும் பணத்தில் [illegible] இச்சிறிய தொகைக்குள்தான் தமிழ ஒலிபரப்பு முழுவதையும் நடத்தவேண்டும் இருந்தும், சென்ற வருடத்திலும் பார்க்க இந்த வருடம் ரேடியோவுக்கு அதிக பணம் அரசாங்கத்தால் அளிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணம் முதலிய தூர இடங்களிலிருந்து அதிகம் பாடகர்களை வரவழைப்பதற்கு வேண்டிய றெயில்வே இலவச ரிக்கற்றுகளின் செலவும், மற்ற நிகழ்ச்சிகளின் செலவுகளும் இப்பணத்திலிருந்து செய்யப்படும்.

ஒரு வருடத்துக்குமுன் சில காலம் நடைபெற்று வந்த புத்தி மண்டலம் என்ற நிகழ்ச்சியைப் புனருத்தாரணம் செய்வித்து மீண்டும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்துவருகிறேம். அநேகமாக வருகிற தை மாதம இது ஆரம்பமாகும். கல்வி சட்டம், வைத்தியம், பொருளாதாரம். வியாபாரம், பத்திரிகைத் தொழில் முதலிய பல்வேறு துறைகளில் பிரபலயானவர்களை ஒன்றுகூட்டி அழைத்து தற்கால பிரச்னைகளைப்பற்றி விசேஷமான கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறவர்களை நிலைய அதிகாரிக்கு எழுதுமாறு கேட்கிறேம்.

இலங்கையின் பழையநாட்டுப் பாடல்களைச் சேகரித்து அவற்றை ஒலிப்பதிவு செய்வதற்கும் முயற்சி நடந்து வருகிறது. இது சம்பந்தமாக சிங்கள நாட்டுப் பாடல்களைச் சேகரிக்கும் ஒரு சபையை [illegible] ஒலிப்பதிவு செய்யும் கருவிகளுடன [illegible] வெளியூர்களுக்கு விஜயஞ் செய்வார்கள். இது முடிந்தவுடன், யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு, மன்னர், முல்லைத்தீவு, வவுனியா, புத்தளம் முதலிய இடங்களில் இன்னும் உயிரோடிருக்கும் எமது பழந்தமிழ்ப் பாட்டுக்களைச் சேகரிப்பதற்கு முயற்சி செய்வோம். ஒலிப்பதிவு யந்திரம் அடங்கிய தபால் தந்தி இலாகா மோட்டார் லொறி ஒன்று, யந்திர நிபுணர்களுடன் கிராமம் கிராமமாகச் சென்று இப்பாட்டுக்களை ஒலிப்பதிவு செய்யும். நாட்டுப் பாடல் பிரதிகளை வைத்திருப்பவர்களையும் அவற்றைப் பாடத் தெரிந்தவர்களையும் நிலைய அதிகாரிக்கு எழுதித் தங்கள் ஒத்துழைப்பைத் தருமாறு கேட்டுக் கொள்கிறேம். அத்துடன், நாட்டுப் பாடல்களைப்பற்றிய தகவல்களைச் சேகரித்து உதவுமாறு நிலைய அதிகாரி யாழ்ப்பாணம், திரிகோணமலை முதலிய இடங்களிலுள்ள அரசாங்க ஏஜெண்டுகளுக்கு எழுதுவார்.

கிராம வாசிகளுக்குப் பயன்தரக்கூடிய நிகழ்ச்சிகள் கொழும்பு ரேடியோவில் மிகக்குறைவென்றே கூறவேண்டும்—துப்புரவாக இல்லையென்றும் கூறலாம். கிராம வாசிகளுக்கு பிறஉலக செய்திகளைப்பற்றிய விளக்கங்களைக் கூறுவதும், விவசாயம், வியாபாரம், பொருளாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பலன் தரக்கூடிய குறிப்புக்களைக் கொடுப்பதும் ரேடியோவின் முக்கியமான உபயோகங்களிலொன்று. எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் ரேடியோவின்மூலம் தங்கள் நாளாந்த வாழ்க்கைக்கு உபயோகமான பல விஷயங்களைக் கிரகித்துக்கொள்ள முடிகிறது. இந்தக் குறையை நிவிர்த்தித்து ஒழுங்கான ஓர் கிராம நிகழ்ச்சியைத் தினந்தோறும் நடத்துவதற்கு ஆலோசனை நடந்துவருகிறது. தற்சமயம் வாராவாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் 'மாட்டிலும் மனிலும்" என்ற நிகழ்ச்சியில் தேவையான திருத்தங்களை யோசித்து இன்னும் விசேஷமாக நடத்துவதற்கு ஒரு கிளைச்சபை சேர்க்கப்படும். நேயர்கள் விரும்பும் திருத்தங்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளரசு மரத்துப்

# பிள்ளையார் எங்கே?

புலோலி மேற்கு,
ஸ்ரீ மு. செல்வநாயகம் அவர்கள் பின்வருமாறு எழுதுகிறர்:

திங்கள் 25—11—47-ல் வெளிவந்த பத்திரிகையில், அநுராதபுரியில் போதி விருக்ஷத்தின் கீழிருந்த பிள்ளையாரைப்பற்றி வரைந்துள்ளதையும் திரு. R. T. சுப்பிரமணியமவர்கள் 2—12—47-ல் தோற்றிய இதழில் எழுதியவற்றையும், வாசித்து சமயாபிமானமுள்ள சைவசமயிகள் துக்கப்படுகின்றனர். இத்துக்கத்தை நீக்குவதற்கு முயலுமுன் சொல்லப்பட்ட விஷயத்தைப்பற்றி நன்ருய் ஆராயவேண்டும். பேசப்படும் விநாயகக்கடவுளின் விக்கிரகத்தை, இந்து சமய ஆலயங்களில் வெவ்வேறு இடங்களில் விக்கிரகங்களை வைத்துப் பூஜிப்பதுபோல, வேறு இடத்தில் வைத்துத் தெரிசிக்கும் நோக்கமாக இருந்த இடத்திலிருந்து நீக்கப்பட்டதா அல்லது தமிழர் அங்கு சென்று வணங்கக்கூடாதென்ற நோக்கமா? இதை நன்ருய் ஆராய்ந்து பார்த்து அதற்குத் தகுந்த சிகிச்சை செய்வது விவேகமாகும். அன்றி கொழும்பிலுள்ள விவேகானந்தசபையார் குருடன் மணிக்கு அடித்த மாதிரி கதிர்காம விஷயத்தை எடுத்துப்பகைமையுண்டாக்கினவாறு இவ் விஷயத்திலும் இறங்கினல் "பருமுத்திப் பவுந்திரமானதுபோல" இச்சிறு விஷயத்திலிருந்து மலைபோன்றபகைமையைச் சம்பாதிக்க நேரிடும்.

அசோக மகாராசாவின் சிரேஷ்ட புத்திரியாகிய சங்கமித்தை புத்தகயாவிலுள்ள போதி விருக்ஷத்தின் கிளையொன்றை இலங்கைக்குக் கொண்டுவந்து அநுராதபுரியில் நாட்டி, விநாயகக் கடவுளை சமய விதிப்படி ஸ்தாபித்து புத்தசமயத்தை ஓங்கி வளரச் செய்தாளென்பதை இலங்கையராகிய நாமெல்லோரும் அறிவோம்;

எம் சகோதர சகோதரிகளாகிய சிங்களச் சாகியத்தாரின் நாமங்களும் கடவுள் வழிபாடுகளும் ஆலயதரிசன விதிகளும், பழக்க வழக்கங்களும், விவாக வைபவங்களும், இரத்தமும் ஒன்றென்று காட்டுவதற்காக, சங்கமித்தை போதி விருக்ஷத்தின் கிளையை நாட்டிச் சமய விதிப்படி விநாயகக் கடவுளின் விக்கிரகத்தை அதற்குப் பக்கத்தில் வைத்து வணங்கியதைப் புத்த சமயிகளும் இதர தேசத்தவர்களும் மறக்கமுடியாது. புத்தசமயத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவந்த சங்கமித்தையின்செய்கைக்கு மாருக புத்த சமயிகள் இவ் விஷயத்தில்நடந்திருந்தால் அது அவர்களுக்கு இழிவையும் தாழ்வையும் கொடுக்குமன்றி சைவசமயிகளுக்குக் கொடுக்காது,

எமது தாய்ப்பாஷையாகியதமிழில் ஆர்வங் கொண்டிருந்தமையால்தமிழ் என்ற நாமத்தைச் சூட்டிக்கொண்டு வந்த தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு மாலை சூட்டிவைத்தோம், இவ்வாறு இன்மைப் பகைமை அழிக்கக்கூடிய சைவசமயத்தில் ஆப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் சமயாபிமானிகளுக்கும் ஆர்வமிருக்குமாயின் எல்லோரும் ஒருங்குசேர்ந்து கூட்டங்களைக்கூட்டி அதில் ஆற்றவேண்டியவைகளைத் தீர்மானித்து, அவ்விஷயத்தை எடுத்துப் பேசுவதற்குத் தகுந்த பெரியாரைத் தெரிந்தெடுத்துக் கொழும்புக்கு அனுப்பி சிங்களச் சகோதரர்களுக்கு எம் கவலையைக் கூறினல் விஷயம் அநுகூலமாவதன்றி ஒற்றுமையும் ஓங்கி வளரும். அன்றேல், பத்திரிகைகளில் பலதையும் எழுதிப் பிரசுரஞ் செய்தால் வீண் வம்பும் விரோதமும் ஏற்படும். புத்தியிருக்குமாயின் தமிழராகிய நாமெல்லோரும் பிழைப்போம். அல்லது தான்சாக நஞ்சுண்டவன் போலாவோம. வேற்றுமையை ஒழித்து ஒற்றுமையை நாடி ஓங்கி வளர்வோமாக.

## கொழும்பு ரேடியோ நிலையம்

3ம் பக்கத் தொடர்ச்சி

களை உடனே அறிவிக்கவேண்டும்.

கிராமங்களில் றேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு இப்பொழுது வசதிகள் இல்லாமலிருப்பது விசனிக்கத்தக்கது. கிராமங்களில் பிரபல்யமான பொதுஇடங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் றேடியோ செற்றுகள் அமைத்து கிராமவாசிகட்கும் பள்ளிக்கூடப் பிள்ளைகட்கும் வசதியான நேரங்களில் நிகழ்ச்சிகளைக்கேட்டுப் பயன்படவேண்டுமென்ற பேராசையோடும் இயன்றளவு ஊக்கத்தோடும் நமது தமிழ் நிகழ்ச்சிக் காரியசபை முயற்சி செய்யும். இதற்கு அரசாங்க உதவி மாத்திரமல்ல கிராமச் சங்கங்களினதும் பள்ளிக்கூட அதிகாரிகளினதும் ஒத்துழைப்புந்தேவை.

ரேடியோவில் தமிழ் நாடகங்களை நடத்தவேண்டுமென்று சில நண்பர்கள்விரும்புகிறர்கள். நாடகங்களைத் தயாரித்துத் தரக்கூடியவர்களும் நடிக்கும் திறமையுள்ளவர்களும் இவ்விஷயத்தில் எம்முடன் ஒத்துழைக்கும்படி கேட்கிறோம். மாதம் இருமுறை வெளிவரும் ரேடியோ நிகழ்ச்சி நிரலில் திறமான நாடகத்தை எழுதி அனுப்புபவருக்கு 50 ரூபா பரிசு வழங்கப்படுமென்றும் நாடகம் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டுமென்றும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தைப் பார்க்கும்படி கேட்கிறோம்.

இன்று என் பேச்சை நான் முடிவுக்கு முன் நமது நிலையத்தில் நடைபெறும் தமிழ்ப் பேச்சுகளைப்பற்றியும் ஒரு வார்த்தை கூறவேண்டியிருக்கிறது. சங்கீதக் கச்சேரிகளைக் கேட்பவர்கள் சிலர்மாத்திரமேயானல் பேச்சுக்களைக் கேட்கிறவர்கள் மிகமிகச் சிலர்தானென்று கூறலாம். ஆகையினல்தான் பேச்சுக்களைப் பற்றி நிலையத்திற்குக் கடிதங்கள் வருவதில்லைப் போலும். இதையும் நேயர்கள் கவனித்து இனிமேல் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார்களென்று நம்புகின்றோம்.

கடைசியாக நான் கூறுவது என்னவென்றல், உங்களுக்கு எந்தத் துறையில் திருத்தங்கள் தேவையெனக் கருதுகிறீர்களோ அவற்றைப்பற்றித் தாராளமாக நிலைய அதிகாரிக்கு அல்லது தமிழ் நிகழ்ச்சிக் காரியசபைத் தலைவருக்கு எழுதவேண்டுமென்பதே. அப்பொழுதுதான் எங்கள் சபையும் நிகழ்ச்சிகளில் வேண்டிய திருத்தங்களைச் செய்ய உதவியாயிருக்கும்.

## விளம்பரம்

யாழ்ப்பாணம் உதவி ஏசண்டர் 1947ம் ஆண்டு டிசம்பர் மாசம் 23ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணி வரைக்கும் தனக்குத் தேவைப்படும் 3000 முழுக் கிடுகுகளும் அல்லது அதற்குக் கூடிய கிடுகுகளையும் வேண்டுகிறதற்காகக் குறித்த (ரெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் அதற்குரிய மாதிரிப் பத்திரங்களில் யாழ்ப்பாணம் உதவி ஏசண்டரிடம் பெற்று அதன்மூலம் தங்கள் விண்ணப்பங்களைத் தெரிவிக்கவேண்டும். எல்லா விபரங்களும் இவர்மூலமே அறிந்து கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணக்கச்சேரியில் உதவி ஏசண்டர் பெயரில் முன்தொகையாக ரூபாய் 50 கட்டி அதன் பற்றுச்சீட்டைக் கொடுத்துக் குறிக்கப்பட்ட பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இதில் அநுகூலமடைந்தவர்(டெண்டர்) பத்திரத்தில் ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடமுன் ரூபா 300 பிணைக்கட்டணம் செய்யவேண்டும்

ம ஸ்ரீ கந்தா
யாழ்ப்பாணம் உதவி ஏசண்டர்

G 127 16

பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

# அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிதி

நமது பண்டிதரவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை, வருகிற மார்கழி மீ கஉ (27-12-47) சனிக்கிழமை திருவருளைமுன்னிட்டு நடத்தநிச்சயித்திருப்பதால், அத்தேதிக்கு முந்தியே மேற்படி பண்டிதரவர்களின் மாணக்கர்கள் அபிமானிகளாயுள்ளார னைவரும் இந்நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்றபணம்உதவுக. மேலும் பணம்உதவும்அன்பர்கள் தம்பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி, திரு. S. P. கந்தையா அவர்கள் மேற்படி நிதித் தனதிகாரி, இந்துசாதனலயம், வண்ணர்பண்ணை என்னும் விலாசத்திற்கு அனுப்புக.

இந் நிதிக்குப் பண முதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன இந்துசாதனத்தில் வெளிவரும்.

திருவாளர்கள்:

| | ரூ. | ச. |
|---|---|---|
| முன் கணக்குப்படி | 1313 | 50 |
| கே சின்னத்தம்பி. F.M.S.பென்ஷனர் வல்வெட்டித்துறை | 10 | 00 |
| ஆர். சிவகுருநாதர், வண்ணர்பண்ணை | 10 | 00 |
| கே. சணமுகம், வட்டுக்கோட்டை | 3 | 00 |
| ஏ. மகாலிங்கம். 63 க்ளேன் வீதி, கோலாலம்பூர் | 10 | 00 |
| ஏ. இளையநம்பி, உடையார் வளவு, உரும்பராய். | 3 | 00 |
| "கோக்குவில் சைவத் தமிழ் வித்தியாசாலை தலைமை ஆசிரியரும், ஏனைய ஆசிரியர்களும்" | | |
| வி. கணபதிப்பிள்ளை, | 10 | 00 |
| வி. இ. மூர்த்தி | 5 | 00 |
| ஸி. கனகசபை | 2 | 00 |
| குமாரி ஆர்: சதாசிவம் | 7 | 50 |
| ஸ்ரீமதி என். எம். தம்பாபிள்ளை | 5 | 00 |
| ,, ஆர். எஸ. செல்வநாயகம் | 5 | 00 |
| | 1390 | 00 |

கா. கந்தையா,
தலைவர்.

க. சி. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

ஷெ பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை. வண்ணர்பண்ணை

## காணி விற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு
இல. வழக்கு 296/G

கீழ்க்காணும் காணிகளை வாங்க விரும்பியவர்கள் காணி வாங்க விரும்பிய விலையை இவ்விளம்பரத் திகதியிலிருந்து 21 நாட்களுக்கிடையில் யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டு சக்கிடுத்தாருக்கு அல்லது N. T சிவஞானம், 6 மெயின் ஸ்திரீட் யாழ்ப்பாணம் அவர்களுக்கு எழுத்துமூலமாக அறிவிக்கவும்.

1. ஊர்காவற்றுறை கோவிற்பற்று நாரந்தனை இறை நிலப்பரப்பு 25 "வீரன் கலம்" எல்லை: கிழக்கு. வயித்தியாம்பிள்ளை மனுவல்பிள்ளையும் மறு, வடக்கு. சவிரிமூத்து மரியாம்பிள்ளை, மேற்கு.ஒழுங்கை தெற்கு, இராசையா கைம்பெண் அன்னமுத்து இதடங்களிற் சொரியலாய் அரைவாசி.

2. மேற்படி இறை 'ஈச்சம்புலமும் ஈச்சம்புலம்" நிலப்பரப்பு 17½. எல்லை: கிழக்கு, செபஸ்தியாம்பிள்ளை பெண் செலலமும் மறு. வடக்கு, கந்தையா கைம்பெண் தங்கரெத்தினமும் மறு. மேற்கு.சந்தியாப்பிள்ளை பெண் மாகரெட். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

3. மேற்படி இறை "சிறுவீரன்கலம்' நிலப்பரப்பு 2½ எல்லை: கிழக்கு, தம்பிராசா பெண் சவீனம்மா. வடக்கு, செல்லையாபெண்மேரிப்பிள்ளையும் மறு. மேற்கு கந்தையா பெண் தங்கரெத்தினமும் மறு: தெற்கு, சூரியர் தம்பையா. இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி,

4 மேற்படி இறை "மாகலிட்காடும் தனுக்காடும்" நிலப்பரப்பு 18. எல்லை: கிழக்கு, செபமாலை பெண் அந்தோனியாள். வடக்கு, முடிக்குரியகாணி, மேற்கு ஒழுங்கை. தெற்கு, ஆறுமுகம் ஆச்சிப்பிள்ளை இதடங்கலிற் சொரியலாய் ¼ காலில் ஒன்று.

M 194 12, 16 12-47

உங்கள் வியாபாரம்

விருத்தியுற

வேண்டுமா?

*

அப்படியானல்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

## காணி விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் 318-ம் இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் (318 G D. C. Jaffna)

சுண்ணுகம் பராயமற்ற வல்லிபுரம் இராசரத்தினத்தின் சொந்தமான கீழ் விபரிக்கப்படும் மூன்று ஆதனங்களை வாங்க விரும்புவோர் இது விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து 21 நாட்களுக்கிடையில் தங்கள் தங்கள் (ஒவ்வொரு காணியின் அதி உயர்ந்த) கேள்வியை மேற்குறித்த கோட்டுச் சக்கடத்தாருக்காவது அல்லது எனக்காவது கிடைக்கும்படி விண்ணப்பஞ் செய்யுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

காணிகளின் விபரம்:

1. உடுவிற் கோவிற்பற்று சுண்ணுகமிறை "கதிரவலை" குளி $6\frac{18}{32}$ ம் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிற் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு கைஒழுங்கை. வடக்கு கை ஒழுங்கை. மேற்கு ஒழுங்கை. தெற்கு வேலுப்பிள்ளை பெண் தெய்வானைப்பிள்ளை.இதடங்கலும்.

2. மேற்படியிறை "யாறச்சை" நிலப்பரப்பு 46ம் கிணறும் மேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை பெண் செல்லமும் மறுவும் சின்னத்தம்பி நவரத்தினமும் வடக்கு சின்னத்தம்பி நவரத்தினமும் ஒழுங்கையும் சின்னத்தம்பர் கனகரத்தினமும். மேற்கு சின்னத்தம்பர் கனகரத்தினமும் றெயில் ரோட்டும். தெற்கு ஆசைப்பிள்ளை நடராசா. இவ்வெல்லைக்குட் பட்டவைகளில் சொரியலாய் $\frac{1}{32}$.

3. மேற்படியிறை "உப்பத்தறவை" நெற்பரப்பு 21 ம் குளி 9ம் கிணறும், எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கும் தெற்கும் சுப்பிரமணியம் கைம்பெண் உத்தராடம். மேற்கு குமாரசாமி அம்பலவாணரும் கனகசபை பொன்னையாவும் இவ்வெல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் $\frac{1}{32}$.

தி. குமாரசுவாமி,
பாதுகாப்புக்காரனின் பிறக்ரர்.
சுண்ணுகம், 18-12 47.
M's 200, 16 12-47.

## நிறைவேறிவிட்டது

இலங்கைக்குச் சுதந்திரமளிக்கும் மசோதா, பிரிட்டிஷ் பாராளுமன்றத்துப் பிரபுக்கள் சபையிலும் நிறைவேறி, மன்னர்பிரானின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பயன்

சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில
எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்குச் சமய பாடமாக
விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 (அணு 12)

**திருக்குறள்** முதல் 20 அதிகாரம்

பதவுரை, கருத்துரை, விசேடவுரை ஆங்கில மொழி
பெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றுடன்

விலைசதம் 75 (அணு 12)

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும்,
பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்


## திருச்சி ரேடியோ

புதன் டிசம்பர் 17

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 எஸ் சைலப்ப ஓதுவார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 கே வ ராதாகிருஷ்ணபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் சைலப்பஓதுவார் 2 15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு,

மாலை 5 கும்பகோணம் டி எஸ் சம்பந்தபிள்ளை வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 பொன் குஞ்சு நாடகம் 7 15 ரேடியோ வாத்ய கோஷ்டி 7 30 தமிழில் செய்திகள் 7 45 மதராசில் உள்ளபடி ஹரிசன முன்னேற்றம் 8 கே வ ராதாகிருஷ்ணபிள்ளை பாட்டு 8 30 கும்பகோணம் டி எஸ் சம்பந்தம்பிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வாத்ய கதம்பம் இசைத்தட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் டிசம்பர் 18

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 தஞ்சாவூர் கே கோபாலகிருஷ்ணபிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 கே சுப்பிரமணியம் வீணை 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல் வகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 தஞ்சாவூர் கே பாலகிருஷ்ணபிள்ளை பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சிதம்பரம் இசைத்தட்டு 7 15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 சிதம்பரம் ஜயராம்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 கே சுப்பிரமணியம் வீணை 10 30 முடிவு.

வெள்ளி டிசம்பர் 19

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 வ என் ஐயாமணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி பாட்டு 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சிதம்பரம் ஜி அம்புஜவல்லி பாட்டு 7 30 தமிழ்ச் செய்திகள் 7 45 நமது தபால்பெட்டி 8 திருவாவடுதுறை என் ராஜாரத்தினம் பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப்பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

## பாய் பரமானந்தர்

அகில இந்திய ஹிந்து மகாசபைத் தலைவராக இருந்த பாய் பரமானந்தர் சென்றவாரம் ஜலந்தாரில் தேகவியோகமானுர்.

●

இந்திய மிதவாதிகள் தலைவராக விருந்த சேர் சிமன்லால் சேதல்வாத் சென்றபுதன்கிழமை பம்பாயில் தேகவியோகமாயினுர்:

## லீக்கர் விலகுகின்றனர்

இந்தியாவின் ஐக்கிய மாகாணத்தில் உள்ள பிரபல முஸ்லிம் லீக்கர்கள், தங்கள் லீக் ஸ்தாபனத்திலிருந்து விலகத் தீர்மானித்துவிட்டனர், இவர்களிற் பல சட்டசபை யங்கத்தவர்களும் சேர்ந்தவர்களாவர்.


எச்சரிக்கை எச்சரிக்கை

## சிவநேயச் செல்வர்காள்

வேலணை துலக்தைவனம் சித்திவிநாயகர் கோவில் திருப்பணி வேலைக்கெனப் பணந்திரட்டும் நோக்கமாக யாரோ ஒருவர் கள்ளத்தனமாக ஓர் விஞ்ஞாபனம் வெளியிட்டு அதன் மூலமாக பணம் வசூலித்து வருவதாக அறிகின்றேம். அந்த விளம்பரம் 10—12—47ல் யாழ்ப்பாணம் ஆனந்தஅச்சியந்திரசாலையில் அ கார்த்திகேசு கோவில் மனேஜர் எனப் பொய்யான கையொப்பத்துடன் வெளிவந்திருக்கின்றது. இது சைவமக்களை ஏமாற்றிச் சுயநலத்திற்குப் பணம் வசூலிக்கச் செய்த சூழ்ச்சியாகும் ஆகவே மேற்காட்டிய விளம்பரத்துடன் வருபவர்களிடம் ஷெ நிதிக்குப் பணம்கொடாதிருக்கும்படி பொது சனங்களைத் தயவுடனும் அன்புடனும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

அ. த. கார்த்திகேயமூர்த்தி
மேற்படி நிதிக்குப் பணம் வசூலிப்பவர்

இன்புலம் - வேலணை
M 204 16.


# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிப்பட்டுள்ளன.

ஆயவமு தத்தினேடு நஞ்சளவி யுண்சநரை யவ்விடமலால்
தூயவமு தோவுயிர தொலைக்குமது போலுனது தொல்லருளினல்
ஏயதிரு வெய்திட விருந்தனமுன் னேடமர் இயற்றி யதனல்
நீயெமை முடித்திலை யன்னதவ றெம்முயிரை நீக்கி யதரோ.

(உயிர் வாழ்க்கையைத் தருதற்காகிய) அமிர்தத்துடன் நஞ்சினையும் சேர்த்து உண்பவர்களை, அந்தவிடமேயல்லாமல், சுத்தமான அமிர்தம் (அவர்களுடைய) உயிரை நீக்குமோ (நீக்கப்போவதில்லை) அத்தன்மையாக, தேவரீருடைய நிலையான திருவருள் வாயிலாக (முன்னர் எங்கட்கு) வாய்ந்திருந்த செல்வங்களை யெல்லாம் பெறலாமெனக் காத்திருந்த நாங்கள், தேவரீரோடு யுத்தஞ் செய்த காரணமாகத் தேவரீர் எங்களைக் கொன்றிலீர்; நாங்கள் தேவரீருக்குச் செய்த அபராதமே எங்களுடைய உயிரைக் கவர்ந்ததென்பது கருத்து.

அமுதோ என்பதில் ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது; அமுதமானது உயிரைப் பாதுகாக்கு மியல்புடையதாயினும் அதனேடு நஞ்சைக் கலந்துண்ணின், அமிர்ததின் பாதுகாத்தல்வலி குன்றி, நஞ்சின் கொல்லும் வலியே விஞ்சும். அதுபோல தேவரீருடையதிருவருளைவேண்டி நின்ற நாங்கள் அறியாமையினுல் தேவரீருடன்போர்புரிந்து மாளலானேம்; போர்புரிந்தமையாகிய தோஷமே எங்களைக் கொன்றதன்றித் தேவரீர் கொன்றிலீர் என்றபடி; இங்கே தேவர்கள் முருகக் கடவுளிடத்தில் வைத்த பத்தி அமிர்தத்திற்கும், மாறுபட்டுப் பொருதமை நஞ்சிற்கும் முறையே உவமிக்கப்பட்டன. (84)

பண்டுபர மன்றனை யிகழ்ந்தவன் மகத்தினிடு பாகமதுயாம்
உண்டபவம் இன்னமு முடிந்தில அதன்றியும் உனைப்பொருது நேர்
கொண்டிகல் புரிந்தனம் அளப்பில்பவம் வந்ததுமரேச எமைநீ
தண்டமுறை செய்தவை தொலைத்தனை உளத்துடையதண்ணளியினுல்

முன்னொரு காலத்தில் பரமசிவனை நிந்தித்து(ப் புறக்கணித்த) தக்கன் வேள்வியிற் கிடைத்த அவிப்பாகத்தை நாங்கள் உண்ட பாவம் இன்னமும் நீங்கவில்லை; அதுமாத்திரமன்றி, இப்பொழுது தேவரீருடன் மாறுபட்டு நேரில் நின்று யுத்தஞ் செய்தோம்; இதனுல் எண்ணிறந்த பாவங்கள் வந்து சேரலாயின; (ஆதலில்) குமாரக் கடவுளே! திருவுளத்திற் கொண்ட பெரு கருணையினுல் எங்களைத் தேவரீர் முறைப்படி தண்டித்தருளினீர் என்பது கருத்து.

முன்னர்த் தக்கன் பரமபதியை நிந்தித்துப் புறக்கணித்துச் செய்ததாகிய யாகத்திலே நாங்கள் அவிப்பாகம் பெற்றுண்டோமெனினும், அப்பெருமானுடைய சந்நிதியில் நின்று அப்பாவத்தைச் செய்தோமல்லோம்; அப்படியாகவும் நாங்கள் வீரபத்திரக் கடவுளாலும் சூரபன்மனுலும் தண்டிக்கப்பெற்றும் இன்னமும் அப்பாவம் எங்களைவிட்டொழியவில்லை; அப்பாவத்தைக்காட்டிலும் தேவரீருடைய திருமுன்னிலையில் நின்று தேவரீரை எதிர்த்துப் பொருதமை பெரும் பாவமாகும்; ஆனுலும் தேவரீர் கொண்டுள்ள பெருங்கருணையினுல் முந்திய பாவத்தின் சேடத்தையும், இப்பொழுது தேவரீருக்கு நாங்கள் நேரிற்செய்த மகாபாதகத்தையுந் தீர்த்தருளினீரென்றபடி; இந்த இரு பாவங்கள் காரணமாகத் தேவர்களுக்குச் செய்யப்பட்ட தண்டனை மறக்கருணையாம். (85)

ஆதலினெமக் கடிகள் செய்தவந ளுக்குநிந ராற்று வதுதான்
ஏதுஅது மற்றெம யுனக்கடிய ராகவ்வ ணீது மெனினும்
ஆதிர மாகிய வுனக்கடியம் யாப்புதி தளிப்ப தேவனே
தாதையர் பெறச்சிறுவர் தங்களை யவர்க்கருள்கை தக்க பரிசோ.

ஆதலினுலே தேவரீர் எங்களுக்குச் செய்த கருணைக்குக் கைம்மாறாக நாங்கள் தேவரீருக்குச் செய்யத்தக்கது டாதிருக்கின்றது (எதுவுமில்லை); எங்களை இப்பொழுதே தேவரீருக்கு அடியவர்களென ஒப்படைப்போமோ என்றாலும், பரம்பொருளாயுள்ள தேவரீருக்கு ஆதிதொட்டு அடியவர்களாயுள்ள நாங்கள், இப்பொழுது புதிய முறையில் அடியவர்களாவது எவ்வாறு; பிள்ளைகளாயுள்ளவர்கள் தங்கள் பெற்றேருக்குத் தாங்கள் பிள்ளைகளென்று புதிதாக ஒப்புவித்தல் தக்க முறையாகுமா என்பது கருத்து.

தேவரீர் அடியேங்கட்கு இப்பொழுது செய்த திருவருளுக்குக் கைம்மாறில்லையாம், அங்ஙனஞ் செய்யின் தேவரீருக்கு நாங்கள் அடியாரதலே கைம்மாறும்; ஆனும் பிள்ளைகள் என்று பிறந்தார்களோ அன்றுதொட்டு அவர்கள் பெற்றூர்க்குப் பிள்ளைகளென்பதே மரபாக, இடையிலே அப்பிள்ளைகள் "நாங்கள் உங்கள் பிள்ளைகளாக எங்களை உங்களிடம் ஒப்படைக்கிறேமெனச் சொல்லுதல் பொருந்தாது: அதுபோல என்றுந் தேவரீருக்கு அடிமைகளாகவுள்ள நாங்கள் இன்று புதியமுறையில தேவரீருக்கு அடியேமாகின்றேமென ஒப்புவித்தல் பொருந்தாதெனத் தேவர்கள் சண்முகமூர்த்தியைத் துதித்து வணங்கியவாறுமென்க "உங்கையிற் பிள்ளை உமக்கேயடைக்கலமென்—றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியருளியதும் இக்கருத்துப்பற்றியதேயாம்.

## இலங்கை—இந்திய சமரசப் பேச்சு

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் ஹைகமி ஷனராகவுள்ள ஸ்ரீஜுத் வி. வி. கிரி இன்று இந்தியாவுக்குப் பிரயாணமாகின்றூர், இன்னும் சில தினங்களில் நிகழவிருக்கும இலங்கை—இந்திய சமரசப் பேச்சுக்களிற் பங்கு பற்றவே ஸ்ரீஜுத் கிரி இப்போது இந்தியாவுக்குப் போகிறூர்.

இலங்கைப் பிரதமர் மிஸ்டர் சேனநாயக்காவும் வருகிற 26-ம திகதி புதுடெல்கிக்கு இவ்விஷயமாகப் போகிறூர். அவர் ஜனவரி மாதம் 3-ந்திகதி இலங்கைக்கு மீண்டுவருவார்.

## அத்துமீறிப் பிரவேசித்தாராம்

காரைநகர் மேற்கைச்சேர்ந்த வினசித்தம்பி கணபதிப்பிள்ளை என்பவர் அதே ஊரைச் சேர்ந்த நாகமுத்து அன்னம்மா என்பவர்வீட்டில் அத்துமீறிச் சென்று திருட எத்தனித்தாரென்று குற்றஞ்சாட்டி ஓர் வழக்கு ஊர்காவற்றுறை நீதிஸ்தலத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதி எதிரியை வருகிற 18-ந் திகதிவரையும் விளக்க மறியலில் வைக்கும்படி கட்டளையிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

க ட ன் .

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விள் ட்ரஸற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாகல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48

# இலக்கிய வாசகம்

## மூன்றாம் புத்தகம்

**நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது**
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்**
சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

**செய்யுட் பாகம்**
பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக்கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதி ஒன்று விலை சதம் 60 (அண 10)**

**இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன**

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**
**யாழ்ப்பாணம்**

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

| | |
|---|---|
| ஒருருத்தல் விலை | ரூபா 25 |
| அரைருத்தலுக்கு | ரூபா 12-50 |
| கால்ருத்தல் | ரூபா 6-25 |

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
கீ, 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

# கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

**ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்**
— வல்வெட்டித்துறை —

Std .5 [illegible]

*மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக*

# கப்பல் சீட்டு

**[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]**

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கோள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

**ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,**
252, காங்கேசன்துறை ரேட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: :: பிராஞ்சு: நாகபட்டணம்.

3 2—9—47&28-2-48

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Tuesday, December 16, 1947

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org